DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KANGAYAM**

| | | |
|---|---|---|
| Calender | : | S.T.C .NO. 39 of 2018 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | D.W. 1 |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : துரைசாமி | தொழில் | : |
| தகப்பனார் பெயர் | : பழனிசாமி | ஜாதி | : |
| கிராமம் | : தாசநாயக்கம்பட்டி | இனம் | : |
| தாலூக்கா | : காங்கேயம் | வயது | : 48 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 24.09.2025.

**Accused present. Complainant absent.**

முதல் விசாரணை

**1. 31.01.2018 ஆம் தேதியிட்ட கிரைய பத்திரம் எ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

நான் வழக்கு காசோலையை மகேந்திரம் என்பவரிடம் வட்டிக்கு பணம் வாங்கியதற்காக பாண்டுடன் கொடுத்திருந்தேன். மகேந்திரன் என்மீது காங்கேயம் சார்பு நீதிமன்றத்தில் புரோநோட் கேஸ் போட்டிருந்தார். அப்போது நான் பைசல் பேசி நீதிமன்றத்திற்கு வெளியே அவருக்கு கொடுக்கவேண்டிய பணத்தை கொடுத்து பைசூலாக முடித்துக்கொண்டேன். அவர் என்னிடம் திருப்பி கொடுக்க வேண்டிய ஆவணங்களில் வழக்கு கசோலையை மறைத்து வைத்துக்கொண்டு மீதி ஆவணங்களை கொடுத்தவிட்டார். நானும் நம்பிக்கையின் அடிப்படையில் இருந்தேன். எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு கிடைத்திருப்பதால் மேற்படி அறிவிப்பு தெரியும். நான் வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்துவிட்டேன். வழக்கு காசோலை

வசூலுக்கு தாக்கல் செய்தபோது எனது வங்கி கணக்கில் ரூபாய் 28,16,000/- கணக்கில் இருந்தது. வழக்கு கசோலையானது கையெழுத்து மாறுபட்டுள்ளது என்ற காரணம் கூறி திருப்பப்பட்டுள்ளது. அந்த காசோலையில் உள்ள கையொப்பம் என்னுடையது அல்ல என்றால் சரிதான். இவ்வழக்கின் புகார்தாரர் எனக்கு யார் என்று தெரியாது என்றால் சரிதான். மகேந்திரன், சிவக்குமார் இருவரும் சேர்ந்த என்மீது தாராபுரத்தில் சார்பு நீதிமன்றத்தில் ஒரு புரோநோட் கேஸ் இவ்வழக்கின் புகார்தாரரை சேர்த்து மோசடியாக எனது கையெழுத்தை போட்டு இவ்வழக்கினை மோசடியாக தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் புகார்தாரரிடம் எந்த பணமும் பெறவில்லை. கொடுக்கவேண்டியதும் இல்லை. இவ்வழக்கானது மோசடியாக ஜோடிக்கப்பட்ட வழக்கு என்றால் சரிதான். எனவே இவ்வழக்கினை தள்ளுபடி செய்து விடுதலை செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சி கையெழுத்தும்/கைரேகை பெறப்பட்டது.

D THENMOZHI
Digitally signed by D THENMOZHI
Date: 2025.09.24 06:33:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காங்கேயம்.